**கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை – 2023**

-----------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் (“சபை”) மற்றும் அதன் விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தினதும் கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தினதும் (“தொகுதி”) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மற்றும் தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் கடியரசு அரசியமலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில், 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல அதிகாரச் சட்டத்தில் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

**தொகுதி**

**மறுப்பு அபிப்பிராயம்**

தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. தொகுதியின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் (1.2) கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

**கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை**

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.5.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து சபையின் நிதிக்கூற்றுக்களானது 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகயில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக இந்த அறிக்கையின் 1.5.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக முனைப்பழிய்ள அபிப்பிராயம் வெளியிடப்படுகின்றது.

தொகுதியிலுள்ள கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக இந்த அறிக்கையின் 1.5.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தினை வெளியிடுகின்றேன்.

தொகுதியிலுள்ள விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூகபாதுகாப்பு நலன் திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக இந்த அறிக்கையின் 1.5.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மறுப்பு அபிப்பிராயத்தினை வெளியிடுகிறேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கிழ் எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்று கணகப்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை

வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்று போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் மற்றும் அதன் தொகுதியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை மற்றும் அதன் தொகுதியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் மற்றும் அதன் தொகுதியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் மற்றும் அதன் தொகுதியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் மற்றும் அதன் தொகுதியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சபையின் நிதிக்கூற்றுக்கள்

#### 1.5.1.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடானான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போத இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 04 ஆம் பந்திக்கு முரணாக, | | |
| (i) தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீதிகளுக்கிடையேயான வித்தியாசம் ரூபா 54,053,519 | சமர்ப்பிக்கும் போது ஏற்படுகின்ற தவறுகளை எதிர்காலத்தில் | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | தொகை பெறவேண்டிய கணக்கு மீதியில் செம்மையாக்குதல் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்திற்காக பேணப்படுகின்ற நடைமுறைக் கணக்குகளில் உள்ளபடியான காசு உட்பாய்ச்சல் ரூபா 206,225,000 மற்றும் உள்ளபடியான காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 205,665,309 தொகை செயற்பாட்டு காசுப் பாய்ச்சலுக்குள் அடையாங்காணப்படாமையால் செயற்பாட்டு காசுப் பாய்ச்சல் ரூபா 54,613,210 இனால் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றினைத் தயாரித்தல் வேண்டும். |
| (ii) | பணமாகச் செலுத்திய ஊழியர் மருத்துவ காப்புறுதி கொடுப்பனவு ரூபா 2,181,826 தொகை காசுப் பாய்ச்சல்கூற்றில் முன்வைக்கப்படாமையின் காரணமாக அப்பெறுமதியால் செயற்பாட்டு காசுப்பாய்ச்சல் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (iii) | விவசாயிகளின் மரணப்பணிக்கொடை நிதியக் கணக்கில் உள்ளபடியான காசுப் பாய்ச்சல் ரூபா 49,281,460 தொகை செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சலாக காட்டப்படாது விவசாயிகளின் மரணப் பணிக்கொடை நிதிய கணக்கின் மீதிகளின் வித்தியாசமான ரூபா 133,219,275 தொகை முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சலாக அறிக்கையிடப்பட்பட்டதன் காரணமாக ரூபா 49,281,460 ஆல் செயற்பாட்டு காசுப் பாய்ச்சல் குறைத்து மதிப்பீடு | சமர்ப்பிக்கும் போது இடம்பெற்றுள்ள தவறினை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டு ரூபா 133,219,275 ஆல் முதலீட்டு காசுப்பாய்ச்சல் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (iv) | விவசாயிகள் ஓய்வூதியத்திட்டத்தின் கடன் கணக்கில் ரூபா 20,000,000 கடனை தீர்த்துவைத்தலானது முதலீட்டு காசு உட்பாய்ச்சலாக பதியப்படாமையால் முதலீட்டு காசுப் பாய்ச்சல் அத்தொகையால் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (v) | ஊழியர் மருத்துவ காப்புறுதி நிதியம் தொடர்பான ரூபா 2,430,248 மற்றும் விவசாயிகளின் மரணப்பணிக்கொடை நிதியம் தொடர்பான ரூபா 6,326,428 பெறவேண்டிய முதலீட்டு வட்டி வருமான கணக்குகளின் மீதிகளின் வித்தியாசம் முதலீட்டு செயற்பாடுகள் மீதான காசுப் பாய்ச்சலாக கருதியதனால் முதலீட்டு காசுப் பாயச்சல் ரூபா 8,756,676 ஆல் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கும் போது இடம்பெற்றுள்ள தவறினை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரித்தல் வேண்டும். |
| (vi) | ஊழியர் மருத்துவ காப்புறுதி நிதிய கணக்குகளின் மீதிகளின் வித்தியாசம் ரூபா 8,500,488 அதிகரித்தல் முதலீட்டு காசுப்பாய்ச்சலில் அறிக்கையிடப்படாமையால் முதலீட்டு காசுப்பாய்ச்சலில் அறிக்கையிடப்படாமையால் முதலீட்டு காசுப் பாய்ச்சல் அத்தொகையால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (vii) | ஊழியர் மருத்துவ காப்புறுதி நிதியத்தின் முதலீட்டின் மீது பெற்ற வட்டி ரூபா 2,972,367 தொகை முதலீட்டு காசுப்பாய்ச்சலில் சமர்ப்பிக்கப்படாமையின் | | |

காரணமாக அத்தொகையால் முதலீட்டு காசுப்பாய்ச்சல் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.5.1.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பரீட்சிக்கப்பட்ட 14 மாவட்ட அலுவலகங்களின் 2023 மார்ச் மாதத்திற்கான மூன்றாந் தரப்பினர் காப்புறுதி வருமானமாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அடையாளங்காணப்பட்டுள்ள பெறுமதிக்கும் மாவட்ட அலுவலகங்களின் கணனிமயப்படுத்தபபட்ட தரவுகளின் பிரகாரமான வருமானத்திற்குமிடையே ரூபா 8,119,818 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | சில முகவர்கள் வைப்பு பற்றுச்சீட்டுக்களையும் தற்காலிக காப்புறுதிப் பத்திரங்களையும் அடுத்துவரும் மாதத்தின் முதலாம் அல்லது இரண்டாம் வாரத்தில் அலுவலகத்திற்கு வழங்கியதனால் உரிய மாதத்தின் வைப்புக்கள் தொடர்பாக மாவட்ட அலுவலகங்கள் நாளதுவரையாக்கி இருக்கவில்லை. எனினும் நிதிப்பிரிவின் மூலம் அப்பணத்தை வைப்புச் செய்த வங்கியின் பிரகாரம் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து பெற்ற வருமானம் நாளதுவரையாக்கப்பட்டது. அதற்கிணங்க உரிய மாவட்ட அலுவலகங்களும் அதனுடன் நாளதுவரையாக்கப்பட்டதுடன் நிதிப்பிரிவின் மூலம் ஒவ்வொரு மாதத்தின் இறுதியில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் உழைத்த வருமானம் காட்டப்படுவதுடன் அதற்கிணங்க தரகுப்பணத்தை கணித்தல் இடம்பெறுகின்றது. | காலப்பகுதிக்குரிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை பயிர்ச்செய்கை சேத காப்புறுதி இழப்பீட்டு கொடுப்பனவுக்காக பொதுத்திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டியதாக சபையின் இறுதிக் கணக்குகளில் காட்டபட்டிருந்த ரூபா 4,249,619,152 தொகையான பெறவேண்டிய வருமானம் 2023 ஆம் ஆண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது. 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் | இதற்கான அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபைக்கு அரசாங்க திறைசேரியினால் பணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் திறைசேரியிடமிருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய பணம் சபையின் நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய பணமாக கணக்கீடு செய்யப்பட்டது. இப்பணத்தை சபைக்கு வழங்குவதற்காக அடிக்கடி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் உரிய | நிதியத்திற்கு மாற்றுவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட வருமானத்தை பதிவழிக்கும் போது அதனை அடிப்படையாகக் கொண்டு செயற்பாட்டு வருமானத்திலிருந்து கமநல காப்புறுதி நிதியத்தற்கு மாற்றுதலினை மீளச் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாட்டு வருமானத்தில் 5 சதவீதம் கமநல காப்புறுதி நிதியத்திற்கு மாற்றப்படுவதனால் மேற்கூறிய தொகை தொடர்பாக அவ்வாறு செயற்பாட்டு வருமானத்திலிருந்து மாற்றப்பட்ட ரூபா 212,480,957 தொகை கமத்தொழில் காப்புறுதி நிதியத்திலிருந்து நீக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. | பணம் சபைக்கு கிடைக்கவில்லை. அதற்கிணங்க சபைக்கு கிடைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பணத்தை திறைசேரியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | செம்மையாக்குதல் வேண்டும். |
| (இ) | மஹியங்கன, எம்பிலிபிடிய, அனுராதபுரம் ஆகிய நகரங்களில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான 03 உத்தியோயகபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள 76.6 பேச்சர்ஸ் அளவிலான காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | மஹியங்கனை, எம்பிலிபிடிய, அனுராதபுரம் ஆகிய உத்தியோகபூர்வ இல்லங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களின் குறிப்பிடுதல் வேண்டும். |

**1.5.2 கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள்**

**1.5.2.1 இல்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 04 ஆம் பந்திக்கு முரணாக முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்கள் ரூபா 98,000 குறைத்தலும் மரணப் பணிக்கொடை நிதியத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,746,720 தொகையினை சேர்த்துக்கொள்ளலும் செய்யப்பட வேண்டிய போதிலும் குறைத்துக் காட்டுதல்களும் மரணப் பணிக்கொடை நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 173,000 இனை வெளிப்படுத்தியிருக்காமையும் செலுத்த வேண்டிய மரணப் பணிக்கொடை மீதிகளின் வித்தியாசம் ரூபா 8,000 தொழிற்படு மூலதன மாற்றங்களில் சேர்த்தல்களாக உள்ளடக்கப்பட்டிருந்ததன் காரணமாக காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகள் ரூபா 3,410,440 தொகையால் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மரணப் பணிக்கொடை கணக்கின் மீதிகளின் வித்தியாசம் மற்றும் ஒதுக்கீடுகளின் மொத்தமாகிய ரூபா 3,410,440 தொகை | முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்களாக ரூபா 98,000 தொகை இந்த ஆண்டின் போது சரிசெய்தல் மேற்கொள்ளப்பட்டதனால் காசுப்பாய்ச்சல் கூற்றிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செம்மையாக்கல்களையும் முதலீட்டு நடவடிக்கைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செம்மையாக்கல்களையும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதலீட:டு செயற்பாடுகளுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டதன் காரணமாக முதலீட்டு காசுப் பாய்ச்சல் அதிகரித்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 5,532,349,026 தொகையான ஓய்வூதிய பொறுப்புக்களுக்காக காப்பீட்டு மதிப்பீடானது 2007 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஏனைய சமூக பாதுகாப்பு திட்டங்களுடன் காப்பீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அது 2024 ஆண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது உரிய நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது என சுட்டிக்காட்டுகிறேன். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காப்பீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.5.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் ஆளணியினர் அங்கீகரிக்கப்படாதிருந்தும் உரிய செயற்பாடுகளுக்கு நேரடி தொடர்பு இல்லாத இரண்டு உத்தியோகத்தர்களுக்குச் செலுத்திய மொத்தமாக ரூபா 1,332,218 சம்பளம் செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | திட்டத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சேரத்துக்கொள்ளப்பட்டுள்ள இந்த உத்தியோகத்தர்கள் தற்பொழுது ஏனைய கடமைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். திட்டத்தின் கடமைகளை சுழற்சி முறையில் ஏனைய உத்தியோகத்தர்களும் மேற்கொண்டு வருவதனால் இந்த உத்தியோகத்தர்களின் சம்பளம் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. போதியளவு ஆளணியினரைச் சேர்த்துக்கொண்டதன் பின்னர் திட்டத்திற்குரிய ஊழியர்களின் சம்பளத்தை திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் ஆளணியினர்களை அங்கீகரித்து சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். |

### 1.5.2.3 நிதியம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஓய்வூதிய பொறுப்பு ரூபா 5,532,349,026 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறான முதலீட்டுப் பெறுமதி ரூபா 793,308,692 ஆக இருந்ததனால் இக்கடப்பாட்டினைத் தீர்த்துவைப்பதற்கு போதியளவு முதலீடு | பதில் வழங்கப்படவில்லை. | ஓய்வூதியப் பொறுப்பினைத் தீர்த்துவைப்பதற்கு போதியளவு முதலீடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | திட்டத்தின் மொத்த தேறிய சொத்துக்கள் அடிக்கடி மறைப் பெறுமதியைக் கொண்டிருந்ததன் அடிபபடையில் திட்டத்தின் மொத்த சொத்துக்கள் தேறுவதன் மூலம் முழுப் பொறுப்புக்களையும் தீர்த்துவைப்பதற்கு முடியாமையின் அடிப்படையில் திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் சச்சரவுத் தன்மையானதாகும். | இத்திட்டம் சுயநிதியின் அடிப்படையில் செயற்படாததுடன் தவணைப் பணத்தினை தீர்மானிக்கும் போது அரசாங்க நிவாரணத்திற்கு உள்ளீர்க்கப்படுவதனால் இநநிலைமை உருவாகியுள்ளது. அதற்கிணங்க வருடாந்தம் செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பொறுப்பு அதிகரித்துச் செல்வதுடன் அதனால் தேறிய சொத்துக்களின் பெறுமதியும் குறைவடைகின்றது. அக்காரணத்தினால் இத்திட்டத்திற்காக புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளுதல் இடம்பெறவில்லை. | திட்டத்தின் முழு தேறிய சொத்துக்களும் அடிக்கடி மறைப் பெறுமதியாகுவதனை தவிர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.3 விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம்**

**1.5.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| | **உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 88 ஆம் பந்திக்கு முரணாக மீளாய்வாண்டின் போது விவசாயிகளிடமிருந்து கிடைத்த தவணைப் பண வருமானத்தினையும் முதலீட்டு வட்டியையும் உள்ளடக்கி ரூபா 133,810,611 தொகை காலப்பகுதிக்கான வருமானமாக கணக்கீடு செய்யப்படாது திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கப்பட்டுள்ளதனால் அத்தொகையால் இலாபம் குறைவடைந்துள்ளது. | சபையின் விவசாயிகள் ஓய்வூதிய பங்களிப்புகளிலிருந்து அறவிடப்படுகின்ற தவணைப்பணமனது பங்களிப்பாளர்கள் 60 வயதினைப் பூர்த்தியடையும் போது அவர்களுக்கு பிரதிபலனாக செலுத்த வேண்டும் என்பதனால் அறவிடப்பட்ட தவணைப்பணமும் அது தொடர்பான வட்டியினதும் மொத்தம் சபையின் நிதியத்தின் கணக்குகளுக்கு செம்மையாக்கலினை மேற்கொண்டு அதன் மூலம் எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய பொறுப்புக்களுக்காக நிதியத்தினை வலுப்படுத்துதல் எதிர்பார்க்கப்பட்டது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பணத்தை அறவீடு செய்கின்ற காலப்பகுதியின் வருமானமாக அடையாளங்காணுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 86,898,445,376 தொகையான ஓய்வூதிய பொறுப்புக்கான இழப்பீட்டு மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததனால் | விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தின் மற்றும் சபையின் ஏனைய திட்டங்களுக்காக 2024 பாதீட்டின் பிரகாரம் இழப்பீட்டு கணிப்பீட்டு மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இழப்பீட்டு கணிப்பீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல் |

| | | |
|---|---|---|
| சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | | வேண்டும். |

### 1.5.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையினால் திட்டம் தொடர்பாக செலுத்திய ரூபா 10,585,145 பணம் காசு வெளிப்பாய்ச்சலாகவும் ரூபா 3,046,341,760 தொகையான முன்னைய ஆண்டு செம்மையாக்கல்கள் தொழிற்படு மூலதனத்தின் காசு உட்பாய்ச்சலாகவும் சபைக்காக பேணப்பட்ட நடைமுறைக்கணக்கின் ரூபா 470,320 வித்தியாசம் இரண்டு தடவைகள் காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு பிழையாக செம்மையாக்கப்பட்டிருந்தது. மேலும் புதிதாக நிதியத்திற்கான பங்களிப்பு விவசாயிகளிடமிருந்து பெற்ற ரூபா 20,730,787 தொகையும் காசு உட்பாய்ச்சலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் செம்மையாக்கப்பட்டிருந்ததுடன் பணமாக தீர்த்து வைக்கப்பட்ட ரூபா 20,000,000 கடன் தவணைப் பணம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப்பாய்ச்சலாக பதியப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக செலுத்தப்பட்டது ரூபா 10,585,145 பணிக்கொடை பணமாகும். தொழிற்படு மூலதன மாற்றங்களிலிருந்து செம்மையாக்கல் இட்ம்பெறுவதனால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலுக்கு தற்பொழுது செம்மையாக்கல் இடம்பெற்றுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு உட்பாய்ச்சலும் காசு வெளிப்பாய்ச்சலும் சரியாகப் பதியப்படுதல் வேண்டும். |

### 1.5.3.3 நிதியம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திட்டத்தின் முழுச் சொத்துக்கள் ரூபா 2,202,748,150 ஆகவும் முழுப்பொறுப்புக்கள் ரூபா 89,457,327,488 ஆகவும் இருந்ததனால் சொத்துக்களை மீகைத்த பொறுப்புக்கள் ரூபா 87,254,579,339 தொகையும் முழு நடைமுறைச சொத்துக்கள் ரூபா 1,092,503,529 மற்றும் முழு நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 2,527,354,554 ஆக இருந்ததனால் நடைமுறைச் சொத்துக்களை மிகைத்த நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 1,434,851,025 ஆக இருந்ததுடன் திறைசேரியின் பங்களிப்பு இல்லாது திட்டத்தினை பேணமுடியாத நிலைமை காணப்பட்டதனால் திட்டத்தின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் | விவசாயிகள் ஓய்வூதியப் பொறுப்புக்கள் வருடாந்தம் அதிகரிப்பதுடன் திட்டத்தினுள் முதலீடுகள் இல்லாமை இத்திட்டத்தின் பிரதிபலன்கள் தவணைப் பணத்தினை அதிகரிக்காது பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் கொள்கைகளின் காரணமாக அதிகரித்தனால் இந்நிலைமை உருவாகியிருந்ததுடன் ஒவ்வொரு ஆண்டிலும் அரசாங்கத்தின் பாதீட்டின் மூலம் நிதியை ஒதுக்கீடு செய்து விவசாயிகள் ஓய்வூதியக் கொடுப்பனவு | திட்டத்தினை முறைமைப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ற |

| | | |
|---|---|---|
| பிரச்சினைக்குரியதாகும். | மேற்கொள்ளப்படுகின்றது. | |

**1.5.3.4 கணக்காய்விற்காக எழுத்து மூலசான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| விவசாயிகளின் சரியான ஆயுள் தரவுத் தகவல்களை நாளதுவரையாக்கும் நடைமுறை இல்லாததன் காரணமாக மரணமடைந்த மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் உரிமை கோராத விவசாயிகளின் ஓய்வூதியம் தொடர்ச்சியாக தபால் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இக்காரணத்தினால் 2023 ஆம் ஆண்டின் போது விவசாயிகளால் பொறுப்பேற்கப்படாததனால் தபால் திணைக்களத்தினால் திருப்பி அனுப்பிய ஓய்வூதியம் ரூபா 259,373,191 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அத்திணைக்கத்திடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 81,000,602 ஆகும். ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ளாத விவசாயிகள் தொடர்பான விபரம் பராமரிக்கப்படாமையால் ஆண்டு இறுதி மீதியின் மற்றும் பெற்ற பணத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்தப்படவில்லை. | விவசாயிகள் ஓய்வூதிய திட்டம் தொடர்பாக தலைமை அலுவலகத்திற்கு கிடைத்த அனைத்து ஆவணங்களையும் பரீட்சித:தப் பார்த்து முறைப்படியாக தலைமை அலுவலகத்தில் ஏதாவது ஒரு இடத்தில் அல்லது ஆவணக்காப்பகத்தில் களஞ்சியப்படுத்துவத்றகும் அந்த ஆவணங்களின் தகவல்களுடனான கணனிமயபட்படுத்திய தகவல் முறைமையை நாளதுவரையாக்குதல் இடம்பெறுகின்றது என மேலும் தெரிவிக்கிறேன். மாவட்ட கணக்காளர்களால் செலுத்தப்படாத ஓய்வூதிய ஆவணங்கள் இணையவழியினூடாக எங்களுக்கு வழங்கப்படுவதுடன் அதனை முறைப்படியாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிமை கோரப்படாத பணம் தொடர்பான தகவல்களை நாளதுவரையாக்கி திறைசேரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| நி.பி 381 | சபையின் 45 வங்கி கணக்குகள் உள்ளடங்கலாக தொகுதியின் 57 வங்கி கணக்குகள் திறைசேரியின் அங்கீகாரம் இல்லாது ஆரம்பிக்கப்பட்டு பேணப்பட்டு | சபையினால் கடமைரீதியான கணக்குகளை ஆரம்பிக்கும் போது பணிப்பாளர் சபைக்கு பணிப்பாளர் சபைப் | வங்கி கணக்குகளுக்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருகின்றது. | பத்திரம் அனுப்பிவைக்கப்பட்டு உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| (i) | II ஆம் அத்தியாயத்தின் 13.4 ஆம் பிரிவு | வெற்றிடமான ஒரு பதவியில் பதில் கடமை பார்ப்பதற்காக அப்பதவியினை வகிப்பதற்கு அனைத்து வகையிலும் முழுமையாக தகமையுள்ள ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் தகமை இல்லாத 09 உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்காகவும் ஒரு உத்தியோகத்தர் வழங்கல் உத்தியோகத்தர் பதவிக்காகவும் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 08 மாதங்களிலிருந்து 06 ஆண்டுகள் வரையான காலம் தொடர்ச்சியாக பதில் கடமை காலத்தை நீடித்து சேவையில் ஈடுபடட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | சபையில் வெற்றிடமாகக் காணப்பட்ட பதவியை பூரணப்படுத்துவதற்கு முடியாமையால் பதில் கடமை பதவியின் மூலம் நாடு முழுவதும் இருக்கின்ற விவசாயிகளுக்கு கடமைகள் மற்றும் பொறுப்புக்களை தொடர்ச்சியாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எதிர்காலத்தில் இந்நிலைமையை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதில் கடமை பார்ப்பதற்காக அப்பதவியினை வகிப்பதற்கு அனைத்து வகையிலும் முழுமையான தகமையுள்ள ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | XII ஆம் அத்தியாயத்தின் 7.5 ஆம் பிரிவு | வெளிநாடு செல்வதற்கான விடுமுறையுடன் எதிரீட்டு விடுமுறை பெற்றுக்கொள்ள முடியாது என்ற போதிலும் சபையின் முன்னாள் பணிப்பாளர் நாயகத்தினால் 2023 செப்தெம்பர் 10 ஆந் திகதியிலிருந்து 2023 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரையான 31 நாட்களுக்காக வெளிநாடு செல்வதற்காக எதிரீட்டு விடுமுறை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | பதவி நிலை உத்தியோகத்தரின் விடுமுறை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் போது அவ்வப்போது பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் அறிவுறுத்தல் கடிதங்களின் பிரகாரம் விடுமுறையை கணித்தல் இடம்பெறுவதுடன் தாபன விதிக் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து பிரிவுகள் மற்றும் நிபந்தனைகள் அந்த வகையிலேயே சபையின் உத்தியோகத்தர்களின் | தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விடுமுறைக்காக தொடர்புபடுத்தப்படுவதில்லை. அதற்கிணங்க அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரினால் (நிருவாகம் II) பணிப்பாளர் நாயகத்தின் வெளிநாட்டில் கழித்த காலத்திற்கான விடுமுறை அங்கீகரிக்கப்பட்டது. | |
| (இ) | கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் முகாமைத்துவ சேவை தரத்திலுள்ள பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை | | | |
| (i) | 4.3.1(அ) உபபிரிவு | காப்புறுதிப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் பதவிக்காக அரசாங்க துறையில்/ கூட்டுத்தாபனத்தில்/சபையில் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிறுவனத்தில் 03 ஆண்டுகள் காப்புறுதி செயற்பாடுகள் தொடர்பான அனுபவமுள்ள ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 03 ஆண்டுகள் வெளிக்கள மற்றும் நிருவாக நடவடிக்கைகள் தொடர்பான அனுபவம் உள்ள ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார்.<br><br>திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர் பதவிக்காக அரசாங்க துறையில்/ ட்டுத்தாபனத்தில்/ சபையின் | ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் ஒவ்வொரு பிரிவிற்காக பெயரிடப்பட்டுள்ள உதவிப் பணிப்பாளர்களை போதியளவில் சேர்த்துக்கொள்வதற்கு அங்கீகாரம் கிடைக்காமை மற்றும் வெற்றிடமான பதவிகளுக்காக தகமையுள்ள நபர்கள் முன்வராமை, சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர்களின் தகமைகள் மற்றும் உரிய பிரிவுகளில் சேவையாற்றுவதற்கு அவர்களிடம் காணப்பட்ட விடயம் சார்ந்த அறிவினைப் பரீட்சித்து குறுகிய கால பயிற்சியின் பின்னர் உரிய உத்தியோகத்ரத்களை தலைமை அலுவலகத்தில் உரிய பிரிவுகளுக்கு | ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிறுவனத்தில் 03 ஆண்டுகள் காப்புறுதி நடவடிக்கைகள் காப்புறுதி செயற்பாடுகள் தொடர்பான அனுபவமுள்ள ஒரு உத்தியொகத்தர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 03 ஆண்டுகள் வெளிக்கள மற்றும் நிருவாக நடவடிக்கைகள் தொடர்பான அனுபவம் உள்ள ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார். | இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஒவ்வொரு பிரிவின் பெயரிடப்பட்டுள்ள உதவிப் பணிப்பாளர்களை போதியளவில் சேர்த்துக்கொள்வதற்கு அங்கீகாரம் கிடைக்காமை மற்றும் வெற்றிடமான பதவிகளுக்காக தகமையுள்ள நபர்கள் முன்வராமை, சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர்களின் தகமைகள் மற்றும் உரிய பிரிவுகளில் சேவையாற்றுவதற்கு அவர்களிடம் காணப்பட்ட விடயம் சார்ந்த அறிவினைப் பரீட்சித்து குறுகிய கால பயிற்சியின் பின்னர் உரிய உத்தியோகத்தர்களை தலைமை அலுவலகத்தில் உரிய பிரிவுகளுக்கு இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 5.2.1(அ) உப பிரிவு | வெளி விண்ணப்பதாரர்கள் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் கணிதம் உள்ளடங்கலாக இன்னும் இரண்டு பாடங்களில் திறைமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திரக்க வேண்டிய தகமை பெற்றிருக்காத 12 உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காகச் சேர்த்துக்கொள்ளப்பட்டு 03 ஆண்டுகள் காலம் அமைய | ஆட்சேர்ப்பிற்காக அங்கீகாரம் கிடைத்திருக்காத காலப்பகுதியின் போது பயிற்சி அடிப்படையில் உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொண்டு சபை நடவடிக்கைகள் ஆக்கபூர்வமாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. அமைய அடிப்படையில் செயற்படுகின்ற முகாமைத்துவ உதவி உத்தியொகத்தர்களுக்கு அவர்களின் பதவிகளுக்குத் | தகமைகளைப் பெற்றிருக்காத உத்தியோகத்தர்கள் அமைய அடிப்படையில் பதவிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களாக வைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | தேவையான ஆரம்ப தகமைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரியப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் எதிர்காலத்தில் அந்த உத்தியோகத்தர்கள் உரிய தகமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | 2022 திசெம்பர் 14 ஆந் திகதிய 2310/29 ஆம் இலக்க நடைமுறை விதிக்கான அதிவிசேட வர்த்தமானியின் IX ஆம் அத்தியாயத்தின் 131 ஆம் பிரிவு | பதில் கடமை நியமனம் செய்யப்பட வேண்டியதானது அங்கீகரித்த ஆளணியில் உள்ள ஒரு பதவியில் சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தரமான ஒரு அரசாங்க உத்தியோகத்தர் முறைமையான அங்கீகாரத்தினைப் பெற்று குறித்த ஒரு காலப்பகுதிக்கு அப்பதவியின் சேவைக்கு வெளியே இருக்கின்ற சந்தர்ப்பத்தில் அல்லது அங்கீகரித்த பதவியணியில் ஒரு பதவி வெற்றிடம் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அப்பதவிக்கு ஒரு நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை தற்காலிக பரிகாரமான போதிலும் 07 பதவிகளுக்காக 26 உத்தியோகத்தர்கள் 08 மாதங்களிலிருந்து 12 ஆண்டுகள் வரையான நீண்டகால பதில் கடமை பார்க்கும் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | தற்பொழுது பதில்கடமை பார்க்கும் 02 பதவிகளுக்காக நிரந்தர ஆட்சேர்பபுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் ஏனைய வெற்றிடமான பதவிகளுக்காக ஆட்சேர்ப்பிற்கு அங்கீகாரத்திறட்காக அனுப்பிவைக்கப்பட்டுள் ளது. அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் வெற்றிடமான பதவிக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை தற்காலிக பரிகாரமாக ஆனால் நீண்ட காலமாக பதில் கடமை பார்க்கும் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தாதிருத்த ல் வேண்டும். |
| (உ) | 2015 மே 25 ஆந் திகதிய PED 1/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | சுற்றறிக்கைக்கு முரணாக MM1-1 சேவைத் தரத்தினைச் சேர்ந்த 19 உத்தியோகத்தர்களுக்கு 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 1,380,533 தொகை மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 1,837,960 தொகையான போக்குவரத்து படிகள் | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சபை தொடர்ச்சியாக நிலைத்திருப்பதற்கு தீர்மானம் எடுக்கும் முறையான அதிகாரம் பணிப்பாளர் சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதிகாரச்சட்டத்திலுள்ள | சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனப் படிகளுக்கு தகமையற்ற சேவைத் தரத்தினைச் சேர்ந்த உத்தியோகத்தர்க ளுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலுத்தப்பட்டிருந்தன. | அதிகாரத்தின் பிரகாரம் பணிப்பாளர் சபையினால் அமுல்ப்படுத்தப்பட்டுள்ள தீர்மானத்திற்கு சுற்றறிக்கையின் மூலம் காட்டப்பட்டுள்ள விடயம் பின்பற்றப்பட வேண்டும். என கணக்காய்சவின் மூலம் காட்டப்பட்டுள்ளதனால் உரிய சுற்றறிக்கையினை வழங்கியுள்ள நிறுவனத்திடமிருந்து அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்காக 2019/05/10 ஆந் திகதிய 3/1/8/1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் வரிசை அமைச்சின் செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக தீர்மானம் வழங்கப்படும் வரை பணிப்பாளர் சபையின் தீர்மானம் அமுல்ப்படுத்தப்பட்டுள்ள துடன் இது சம்பந்தமாக 2023/03/27 ஆந் திகதிய 3/1/8/1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் மீண்டும் வரிசை அமைச்சின் செயலாளரிடம் வேண்டுகொள் விடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன். | போக்குவரத்து படிகள் செலுத்தாதிருத்தல் வேண்டும். |
| (ஊ) | 2022 ஒக்தோபர் 06 ஆந் திகதிய 06/2022 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | 60 வயதினை மிகைத்து சேவையில் ஈடுபடுகின்ற மற்றும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் 60 வயது பூர்த்தியான அரசாங்க தொழில் முயற்சிகளிலுள்ள ஊழியர்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அல்லது அதற்கு முன்னர் கண்டிப்பாக ஓய்வுபெறவேண்டிய போதிலும் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் | நீண்டகாலமாக வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படாமையால் ஊழியர் பற்றாக்குறை சபையில் உருவாகியிருந்தது. புதிய விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்திற்குச் சேர்த்துக்கொள்வது ஆரம்பிக்கப்பட்டு நாடளாவிய ரீதியில் பிரசித்தப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டது. | 60 வயதினைப் பூர்த்திசெய்த ஊழியர்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும். |

சேர்த்துக்கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அத்திகயில் 60 வயதினை பூர்த்திசெய்த மற்றும் 60 வயதினை மிகைத்த 05 உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தி அங்கீகாரமில்லிலாது சம்பளங்களம் படிகளுமாக ரூபா 4,389,535 செலுத்தப்பட்டிருந்தது.

சபைக்கு அதிக தேவைப்பாடு காணப்படுகின்ற ERP முறைமையானது சபையில் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. புதிய பயிற்சி நிலையம், AIMS செயற்திட்டம், காப்புறுதி மேம்படுத்தல் நடவடிக்கை, 4000 இற்கு மேற்பட்ட தபால் அலுவலகங்கள், அனைத்து பிரதேச செயலகங்கள், கால்நடை காப்புறுதி திட்டம் தொடர்பாக கால்நடை காப்புறுதியை விரிவுபடுத்துதலினை ஆரம்பிபத்தல், புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையும் நடைமுறையினைத் தயாரித்தலும் ஆகிய செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே உரிய வெற்றிடங்களை பூரணப்படுத:தும் வரை பல அனுப்வங்கள் உள்ள இந்த உத்தியோகத்தர்களின் சேவையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கிணங்க ஒப்பந்த அடிப்படையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் முகாமைத்துவ உதவியாளர்களையும் சேர்த்துக்கொள்வதற்காக 531/18 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தல் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் புதிய ஆட்சேர்ப்புக்களை

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பின்னர் உரிய உத்தியோகத்தர்களின் சேவையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | |
| (எ) | 2023 சனவரி 18 ஆந் திகதிய 01/2023 ஆம் இலக்க நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு சுற்றறிக்கை | அரசாங்கத்தின் நிதியற்ற சொத்துக்களை ஆவணப்படுத்துவதற்காக 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையிடம் காணப்படுகின்ற கட்டிடங்கள் தொடர்பான தகவல்கள் 2023 ஆம் ஆண்டின் மார்ச் 15 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் கொம்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது சபையிடம் காணப்படுகின்ற தகவல்கள் கொம்பட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அனுராதபுரம், மஹியங்கன, எம்பிலிபிடிய ஆகிய மாவட்ட அலுவலகங்களின் உரிய மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் உரிய சரியான அறிக்கையை பெற்றுக்கொண்டதன் பின்னர் உரிய தகவல்களை கொம்ட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்பட்டது. | அனைத்து கட்டிடங்கள் தொடர்பான தகவல்களை கொம்பட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டில் சபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 982,500,036 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,440,680,754 ஆகும். அதற்கிணங்க் ரூபா 1,458,180,718 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவு அதிகரத்தல் பிரதான காணரமாக இருந்தது.

மீளாய்வாண்டில் தொகுதியின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,884,548,662 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய அண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,135,968,851 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 1,748,579,811 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவு அதிகரித்தல் மற்றும் அதற்காக பொதுத்திறைசேரியிடமிருந்து பெற்ற பங்களிப்பு குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 அடையாளங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வருமானவரிக்காக பதிவுசெய்யாமையின் காரணமாக 2018 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலுத்த வேண்டிய வரிப்பணம் ரூபா 299,354,489 தொகை நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் செலுத்தப்படாமையின் காரணமாக தாமத வட்டி ரூபா 40,869,072 ஆன ஒரு நட்டத்தினை சபை மேற்கொள்ள வேண்டியிருந்தது. | சபை விவசாயக் காப்புறுதி மற்றும் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் 1979 இன் 28 ஆம் இலக்க மற்றும் அதன் பின்னர் அமுல்படுத்தப்பட்ட 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் மூலம் சபையின் அனைத்து இலாபங்கள் மற்றும் வருமானங்கள், வருமான வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும் 2017 இன் 24 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் மூலம் விடுவிக்கப்படாதிருந்ததனால்சபை வருமானவரி செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. வருமானவரி கணிப்பீட்டின் போது சாதாரண கம்பனிகளுக்கான 30 சதவீத வரி வீதத்திற்கு இணங்க சபை வரிசெலுத்த வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் விரிவாக கலந்துரையாடி சபையினால் செலுத்த வேண்டிய வரி வருமானத்தை 14 சதவீத்துடன் தொடர்புபடுத்தி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கிணங்க சபைக்கு நிதி ரீதியான நட்டம் ஏற்படவில்லை. அதற்கிணங்க 2024/25 ஆம் ஆண்டிலிருந்து சரியாக வரிக்கடப்பாட்டினைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2024/25 ஆம் ஆண்டிலிருந்து சரியாக வரிக் கடப்பாட்டினை திர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி அதிகாரச்சட்டத்தின் 07(அ) உபபிரிவின் பிரகாரம் 8,185 விவசாயிகளுக்கு 2017 மற்றும் 2018 ஆம் அண்டுகளின் போது செலுத்தப்பட்ட ரூபா 70,800,200 இழப்பீட்டுப் பணம் கணக்கு இலக்கம், விவசாயிகளின் பெயர், மற்றும் அடையாள அட்டை இலக்கம் என்பன கிடைக்காமையின் காரணமாக வணிக வங்கிகளின் மூலம் திருப்பி அனுப்பப்பட்டிருந்தும் உரிய விவசாயிகளை அடையாளங்கண்டு அப்பணத்தை தீர்த்துவைப்பதற்கு | கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்ட விவசாயிகளுக்கு திருத்திய ஆவணங்களை தயாரித்து அனுப்புமாறு கமநல சேவை நிலையங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவ்வாறு கிடைத்த திருத்திய ஆவணங்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இழப்பீட்டுப் பணத்தை மீண்டும் உரிமை கோராத விவசாயிகளின் மேற்கூறிய ரூபா 70,800,200 பணம் தொடர்ச்சியாக விவசாயிகளால் உரிமை கோரப்படாததனால் | சமர்ப்பிக்கப்படாத இழப்பீட்டுப் பணத்தை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது மீண்டும் திறைசேரிக்கு அனுப்புவதற்கு 06 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விவசாய காப்புறுதி நிதியத்திற்கு மாற்றுவதற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அப்பணம் கமத்தொழில் தரவு முகாமைத்துவ முறைமையை தோற்றுவிப்பதற்காக வழங்குவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. எனினும் அப்பணத்தை மேற்கூறிய குறிக்கோளுக்காக பயன்படுத்தப்படாததனால் மீண்டும் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்து மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2019 செப்தெம்பர் 02 ஆந் திகதிய 07/2017 (திருத்தம் II) ஆம் இலக்க கமத்தொழில், கிராதமிய பொருளாதார நடவடிக்கைகள், நீர்ப்பாசன, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு சுற்றறிக்கையின் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு சுற்றிக்கையின் பிரகாரம் தகவல்களை அறிக்கையிடப்பட்ட 17 அலுவலகங்களில் 2021/2022 பெரும் பொகம் தொடர்பாக திடீர் விபத்துக் காப்புறுதிக்காக 23,351 விவசாயிகளிடமிருந்து ரூபா 9,244,450 தொகை சபை வருமானமாக அடையாளங்காணப்பட்டிரந்த போதிலும் அவர்களில் 15,491 விவசாயிகளுக்கு உறுதிகள் வழங்கப்படாதிருந்ததுடன் 7,851 விவசாயிகளுக்கு ஒரு ஆண்டு பாதுகாப்பு காலத்தில் 07 மாதங்களிலிருந்து 10 மாதங்கள் வரையான காங் கடந்ததன் பின்னர் வழங்கப்பட்டது. | மாவட்ட அலுவலகங்களில் காணப்படுகின்ற உத்தியோகத்தர பற்றாக்குறை மற்றும் உத்தியொகத்தர்களின் வேலைச் சுமை இதற்கு காரணமாக இருந்ததுடன் எதிர்காலத்தில் வழங்கப்படுகின்ற பயிர்ச் செய்கை காப்புறுதி உறுதிகளுக்காக திடீர் விபத்து உறுதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காப்புறுதிகளுக்காக சேர்த்தக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்திலேயே காப்புறுதி சான்றிதழ்பளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பங்களிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ் உறுதியின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் செலுத்தப்பட்டுள்ள அரையாண்டு பங்களிப்பு பணத்தின் அளவில் 75 சதவீதம் கிடைத்திருக்காமையின் சபையினால் திர்மானிக்கப்பட்டவாறு நிர்ணயிக்கப்பட்ட ஓய்வூதியத்தினை விட குறைந்த ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு தகமையிருந்தும் அவ்வாறு செய்யாது ஓய்வூதிய நலன் முழுமையாக இழக்கச் செய்யப்பட்டிருந்தது. | எந்தவொரு பங்களிப்பாளரினையும் இரத்துச் செய்யாது செலுத்த வேண்டிய தவணைப் பணத்தின் அளவில் 75 சதவீதத்திற்கு மிகையாகச் செலுத்தியிருந்தால் அவருக்கு குறைப்பு செய்யப்பட்ட ஓய்வூதியம் தயாரிக்கப்படும். அவ்வாறு குறைப்புச் செய்யப்பட்ட ஓய்வூதியத்தினை தயாரிப்பதற்காக பங்களிப்பினை இரத்துச் செய்யாது 75 சதவீதத்திற்கு மிகையாக தவணைப் பணத்தின் அளவு செலுத்தியிருத்தல் வேண்டும். | அரையாண்டு தவணைப்பணத்தின் 75 சதவீத்தினை செலுத்தியுள்ள பங்களிப்பாளர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 1990 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின் 4 ஆம் உப பிரிவின் பிரகாரம் எதிர்பாராத சம்பவங்களினால் உருவாகின்ற தகமைகளைக் காட்டுவதற்காக கொடுப்பனவு செய்வதற்காக சொந்த விருப்பத்திற்கு இணங்க ஈடுபடுத்தப்பட வேண்டிய திரண்ட நிதியம் 2002 ஆம் ஆண்டிலிருந்து கட்டியெழுப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் மீதி ரூபா 498,536,253 ஆகும். அந்த நிதியத்தினை பயன்படுத்தக்கூடிய எதிர்பாராத சம்பவம் தொடர்பாக விளக்கமளித்து சட்டம் உருவாக்கப்படாததனால் 2002 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை 21 ஆண்டுகள் காலத்தினுள் இந்நிதியம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் “கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி நிதியம்” என்பதாக அறிமுகப்படுகின்ற ஒரு நிதியம் சபைக்கு இருக்க வேண்டும் என்பது காட்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க ஒவ்வொரு ஆண்டிலும் செயற்பாட்டு இலாபத்தித்திலிருந்து 5 சதவீதம் ஒதுக்கீடு செய்வதன் மூலம் இந்நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. சபையினால் கமத்தொழிலாளர்களின் பங்களிப்புடன் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற ஆயுள் காப்புறுதித் திட்டம் உள்ளடங்கலாக ஏனைய காப்புறுதித் திட்டங்களுக்காக உருவாகின்ற தொடக்க மூலதனம் மற்றும் மேலதிக மூலதனத் தேவைப்பாட்டிற்காக (காப்பீட்டு மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உருவாகின்ற தேவைப்பாடு) பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இந்நிதியத்தினை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | நிதியத்தினை ஆரம்பிக்கும் தேவைப்பாடு மற்றும் பயன்படுத:ததல் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (உ) | மூன்றாந் தரப்பினர்களின் வாகனக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு முகவருக்கும் வழங்கப்பட்டுள்ள தற்காலிக காப்புறுதி பத்திரத்தின் அளவு, விற்பனை செய்யப்பட்டுள்ள அளவு, இரத்துச் செய்யப்பட்டுள்ள தற்காலிக காப்புறுதிப் பத்தீரத்தின் அளவு, மற்றும் மாதாந்த விற்பனை வருமானத்தினை உறுதிப்படுத்துவதற்கும் தற்காலிக காப்புறுதிப் பத்தீரத்தின் இலக்கம், ஒழுங்குமுறைப்படியாக அதன் மீது உழைத்த வருமானம் வங்கி கணக்கிற்கு வைப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதனை சான்றுபடுத்துவதற்கும் மற்றும் ஒவ்வொரு முகவர்களினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்களை வங்கி கூற்றுக்களின் மூலம் ஒதுக்கீடு செய்து அடையாளங்காண்பதற்கும் | மூன்றாந் தரப்பினர் காப்புறுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாவட்ட அலுவலகத்தினால் தற்பொழுது Access உள்ளீட்டு முறைமை ஈடுபடுத்தப்பட்டு தரவு முறைமை பேணப்படுகின்றது. இந்த முறைமையினை பகுப்பாய்வு செய்வதன் மூலம் உரிய தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளதுடன் தரவு முறைமைக்கு உரிய தகவல்களை சரியாக உள்ளடக்குமாறு மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டுகிறேன். சபையினால் சில மாவட்ட அலுவலகங்கள் மூன்றாந் தரப்பு காப்புறுதி நடவடிக்கைகளை | வருமானங்கள் மற்றும் தகவல்கள் முழுமையாகக் காணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடியுமான வகையில் சரியான மற்றும் முழுமையான தகவல்கள் பேணப்பட்டிருக்காததுடன் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட வருமானத்தின் முழுமைத் தன்மை உயர்மட்ட உத்தியோகத்தரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | அமுல்ப்படுத்துவதற்காக ERP முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் இத்தரவு முறைமையை பயன்படுத்தி உரிய தகவல்களை சரியாகப் பெற்றுக்கொள்ளும் இயலுமை காணப்படுகின்றது எனச் சுட்டிக் காட்டுகிறேன். | |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கமத்தொழில் அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களின் உதவியுடன் செயற்திட்டத்திற்காக 02 மாதங்களுக்குள் இழப்பீட்டுப் பணத்தை செலுத்த வேண்டிய போதிலும் 2023 மார்ச் மாதத்தில் முடிவடைகின்ற 2022/2023 பெரும் பொகத்திற்காக சிபாரிசு செய்த நெல்லுக்காக கிடைத்த 39,455 விண்ணப்பப் பத்திரங்களுக்காக ரூபா 914,574,064 தொகை 2023 யூன் 09 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2024 செப்தெம்பர் 02 ஆந் திகதி வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | காணப்படுகின்ற நடைமுறை நிலைமைகளின் அடிப்படையிலும் மற்றும் உத்தியோகத்தர்களின் வேலைச்சுமைகளின் அடிப்படையிலும் இவ்வாறான தாமதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் கமநல சேவை நிலையங்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி உரிய தாமதங்களை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் சுட்டிக்காட்டுகிறேன். | இழப்பீட்டுக் கொடுப்பவின் தாமதங்கள் குறைத்தக் கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்து ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு தமையுள்ள 60 வயதினைப் பூர்த்திசெய்துள்ள விவசாயிகளை அடையாளங்கண்டு ஓய்வூதியத்தினை செலுத்தாமை, 15(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களை செலுத்த தவறியுள்ளார்கள் என பங்களிப்புச் செய்தவர்களுக்கு தெரியப்படுத்தாமை மற்றும் நலன்பெறும் தரப்பினர்களால் தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களை செலுத்த தவறியிருக்காத போதிலும் விட்டு விட்டேனும் 05 தவணைப் பணங்களை செலுத்தாத நலன்பெறுனர்களும் உறுதிப்பத்திரத்தினை மீறியுள்ளார்கள் எனக் கருதி ஓய்வூதிய பிரதிபலன்கள் இல்லாமல் ஆக்கப்பட்டிருந்தது. | 60 வயதினைப் பூர்த்திசெய்த ஓய்வூதியக்காரர்களின் விண்ணப்பப்பத்திரங்கள் மற்றும் உரிய அனைத்து ஆவணங்களை சரியாக தலைமை அலுவலகத்திற்கு துரிதமாக அனுப்பிவைக்குமாறு அனைத்து மாவட்ட அலுவலகங்களக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. 60 வயது பூர்த்தியடைந்து இதுவரை விவசாயிகள் ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ளாத விவசாயிகளுக்கு தற்பொழுது தெரியப்படுத்தப்பட்டுள்ளது. ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச்சட்டத்தின் 15(1) ஆம் பிரிவின் பிரகாரம் 05 தவணைப் பணங்களை செலுத்த தவறியுள்ள விவசாயிகளின் பிரதிபலன்கள் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. தவணைப் பணங்களை செலுத்தும் போது கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவது அவர் | 60 வயதினைப் பூர்த்தி செய்கையிலேயே ஓய்வூதியத்தினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தவணைப் பணம் முறையாக அறவிடப்படுகின்றது என்பது சபையினால் மாதாந்தம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலுத்திய தவணைப் பணம் எப்போது செலுத்த வேண்டிய தவணைப் பணம் என்பதாகும். அதற்கிணங்க ஏதாவது தவணைப் பணம் 05 போகங்களுக்கு மேல் அதாவது 2 1/2 ஆண்டுகளுக்கு மேல் தாமதிக்கப்படுமாயின் அவரின் சான்றிதழ் உறுதியில் குறிப்பிட்ட பிரதிபலன்கள் இல்லாமல் ஆக்கப்படுகின்றது. | |
| (இ) | விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தில் பதிவுசெய்துள்ள 871,425 விவசாயிகளில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 61 வயதிலிருந்து 93 வயது வரையான வயதினை அடைந்துள்ள விவசாயிகள் 474,803 ஆக இருந்த போதிலும் அவர்களில் 264,227 விவசாயிகளுக்கு ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 60 வயது பூர்த்தியாகி இதுவரை விவசாயிகள் ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ளாத விவசாயிகளுக்கு தற்பொழுது தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அனைத்து மாவட்ட அலுவலகங்களின் உதவிப் பணிப்பாளர்கள் இச்செயற்பாட்டினை முன்னுரிமைச் செயற்பாடாகக் கருதி நடவடிக்கை எடுத்துள்ளனர் | 60 வயதினைப் பூர்த்தி செய்கையில் ஓய்வூதியத்தினை செலுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்திட்ட அதிகாரச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின் பிரகாரம் 18 வயதிற்கும் 59 வயதிற்கும் இடைப்பட்ட ஒரு கடற்றொழிலாளருக்கு இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கு தகைமை இருந்தும் 2018 ஆம் ஆண்டின் பின்னர் அங்கத்தவர்கள் சேர்த்துக்கொள்ளப்படாமை, அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற கடற்றொழிலாளர்கள் 60 வயதினைப் பூர்த்தியடைகையில் ஓய்வூதியம் வழங்கப்படாமையால் 2007 சனவரியிலிருந்து 2016 திசெம்பர் வரையான காலத்திற்காக 139 கடற்றொழிலாளர்களுக்கு ரூபா 4,159,063 தொகை மற்றும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகள் தொடர்பாக 45 கடற்றொழிலாளர்களுக்கு ரூபா 1,378,518 ஆக மொத்தமாக ரூபா 5,537,581 தொகை நிலுவை ஓய்வூதியமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் கடற்றொழிலாளர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் தற்பொழுது நிதி சாத்திய வளத்துடன் செயற்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்நடவடிக்கைகளை கணனிமயப்படுத்திய சூழலில் மேற்கொள்வதற்காக தற்பொழுது முழுமையான கணனி தரவு முறைமை தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க இத்திட்டத்திற்கு கடற்றொழிலாளர்களை கவரச் செய்வதற்கு 2024 ஆம் ஆண்டின் போது கடற்றொழில் அமைச்சுடன் இணைந்து புதிய கடற்றொழில் ஓய்வூதிய திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 60 வயதினைப் பூர்த்திசெய்த பங்களிப்பாளர்களின் பட்டியல் மாவட்ட அலுவலக மட்டத்தில் பெற்று அந்த அந்த மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அப்பட்டியலினை | 60 வயதினைப் பூர்த்தியடைகையில் ஓய்வூதியத்தினை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியத்திற்கு தகமையுள்ள கடற்றொழிலாளர்களுக்குத் தெரியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் தொடர்பான செயற்பாட்டு நடவடிக்கைகள் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதனால் இந்நிலைமையை அத்திணைக்களத்திற்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற தெரியப்படுத்தல்களுக்கு மேலதிகமாக பத்திரிகை அறிவுறுத்தல்களின் மூலமும் கடற்றொழிலாளர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை 64,117 ஆக இருந்ததுடன் கடற்றொழிலாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 60 வயதினை மிகைத்து ஓய்வூதிய வயதினை அடைந்துள்ள 31,146 கடற்றொழில் பங்களிப்பாளர்களில் 24,187 பங்களிப்பாளர்களுக்கு (ஒரே தடவையில் பங்களிப்பு பணத்தை செலுத்தி பங்களிப்பினை பெற்றுக்கொண்ட 5,549 பங்களிப்பாளர்களை உள்ளடக்கி) கடற்றொழில் ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தாமதித்து கிடைத்துள்ள விண்ணப்பங்களுக்காக தாமதித்தமைக்கான காரணத்தை விளக்கும் வரை நிலுவையான ஓய்வூதியத்தினை செலுத்துதல் இடம்பெறவில்லை. தற்பொழுது நிலுவையான ஓய்வூதியத்துடன் ஓய்வூதியக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. | 60 வயதீனைப் பூர்த்தியடைகையிலேயே ஓய்வூதியத்தினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள, பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்துடன் (IFC) ஒன்றிணைத்து கமத்தொழில் முகாமைத்துவ தகவல் முறைமையை உருவாக்குவதற்காக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பிடமிருந்து 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 20,391,089 தொகை சபைக்கு | கமத்தொழில் முகாமைத்துவ தகவல் முறைமையானது அமைச்சின் தலைமைத்துவத்தில் மேற்கொள்ளப்படுவதுடன் உரிய செலவுகள் விவசாய அமைச்சினூடாக மீளளிப்புச் | கமத்தொழில் முகாமைத்துவ தகவல் முறைமையை தோற்றுவிக்கும் குறிக்கோள் நிறைவேற்றப்படுத |

| | | |
|---|---|---|
| கிடைத்திருந்ததுடன் அந்த ஆண்டின் போது அதற்காக ரூபா 23,009,698 செலவு செய்யப்பட்டிருந்தும் 2024 ஆம் ஆண்டு வரை இழப்பீட்டினைக் கணித்தல் மற்றும் இழப்பீட்டினை செலுத்தும் நடைமுறைக்காக தகவல் முறைமை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செய்யப்படுகின்றது. இது தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் கணக்கு குறிப்புக்களின் மூலமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | ல் வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா 79,000,000 பெறுமதிக்கு உடன்படிக்கை செய்த சபையின் முகாமைத்துவ தகவல் முறைமைக்காக தொழில் முயற்சி வளங்களை திட்டமிடுதல் முறைமை (ERP) System மற்றும் வன்பொருட்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கை 2023 மார்ச் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆகஸ்ட் 20 ஆந் திகதியளவில் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் 2024 யூலை 31 ஆந் திகதி வரை அந்த நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை. | உடன்படிக்கை காலத்தை நீடிப்பதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கைக்கு இணங்க செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும். |